பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 77

நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில் அமைச்சு

பாராளுமன்ற பொது கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் மேற்கொள்ளப்படும் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் அடங்கிய அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 77
நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில் அமைச்சு

மரக்கறி விதைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் செயற்பாட்டின் செயல் திறனை மதிப்பீடு செய்வது தொடர்பான கணக்காய்வு அறிக்கை

விசாரணை செய்த திகதி - 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ஆம் திகதி

குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு வழங்கிய பணிப்புரைகள்	குழு சுட்டிக் காட்டிய குறைபாடுகளை சீர்செய்வதற்கு / குழு வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01. விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை	
விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு, 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைகள் ஒழுங்குறுத்தல் சட்டம் பாராளுமன்றத்தினால் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. மேலும் அரசாங்கத்தின் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் நிமித்தம் சட்டஏற்பாடுகள் கிடைத்துள்ளதால், ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதான வகைகூறும் அதிகாரி (பி. வ. அ.) / வகைகூறும் அதிகாரி (வ. அ.) தெரிவித்துள்ளாளர்.	1. 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விவசாய, காணி மற்றும் வன வளங்கள் அமைச்சின் மூலம் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் தொழில் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையின் 3 (உ) பிரிவில் ஒரு விதைகள் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் விதைகள் பற்றிய கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைகள் சட்டத்தைப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2. அதன்படி, பாராளுமன்றத்தில் விதைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டதால், அரசாங்கத்தின் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு சட்ட அதிகாரம் கிடைத்துள்ளது. ஆகையால், ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 3. 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைகள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்படி, கட்டளைகள் தயாரிக்கப்பட்டு அந்தக் கட்டளைகள் அடங்கிய ஒரு ஒட்டுமொத்த சட்டமூலம் 2016.12.09 ஆம் திகதி அன்று சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மற்றும் 2017.03.10 ஆம் திகதி தமிழ் மொழியிலும் தொகுக்கப்பட்டு கமத்தொழில் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 4. விதைகள் சட்டம் தொடர்பான கட்டளைகள், கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது 3/1/2/விதைகள் சட்டம் 2017.02.15 ஆம் திகதிய கடிதத்தின்

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Sunil Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

மூலம் நீதி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5. சட்ட வரைஞரினால் 2018 ஆம் ஆண்டு மே மாதம் குறித்த ஒழுங்குவிதிகள் அடங்கிய முதலாவது சட்டமூலம் விவசாயத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த சட்டமூலத்தை ஆராய்ந்து 2018.08.14 ஆம் திகதி உரிய சட்டமூலத்திற்கான அவதானிப்புகள் கமத்தொழில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அந்த சட்டமூலம் மீண்டும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6. மேலும் தெளிவுபடுத்தல் அவசியம் என சட்ட வரைஞர் தொலைபேசியில் தெரிவித்துள்ளார். ஆகையால், 2021.09.21 ஆம் திகதி அன்று ஒன்லைன் ஊடாக கலந்துரையாடப்பட்டு, அது தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

7. கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது 2022.01.21 ஆம் திகதிய கடிதத்தில், மேற்குறித்த கட்டளைகளை உடனடியாக சட்டமாகத் தொகுத்துத் தருமாறு சட்ட வரைஞர் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.

8. உரிய சட்டமூலம் 2023.01.08 ஆம் திகதி அன்று விவசாயத் திணைக்களத்திற்கு அவதானிப்பின் நிமித்தம் அனுப்பப்பட்டது. மேலும் கமத்தொழில் அமைச்சு 2023.04.27 ஆம் திகதி அன்று குறித்த அவதானிப்புகளை சட்ட வரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பித்தது. இருப்பினும், மேலும் அந்த ஒழுங்குவிதிகளை விரைவில் அங்கீகரிப்பதற்காக விதைகள் சபையில் ஆராயப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Janaka Dharmakeerthi
Ministry of [illegible] Industries
No. [illegible] Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

02. விதைகளின் இறக்குமதியினால் விதைகளின் விலைகள் அதிகரித்தல்

விவசாயத் திணைக்களத்தில் மரக்கறி விதைகள் உற்பத்திக்கான வேலைத் திட்டம் உள்ளதாகவும், விசேட தொழில் நுட்ப செயற்பாட்டின் ஊடாக விதைகள் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாகவும், இலங்கையில் நிலவுகின்ற காலநிலை காரணமாக உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத விதை வகைகள் இருப்பதாகவும் கமத்தொழில் அமைச்சின் (பி. வ. அ.) / வ.அ. தொிவித்துள்ளார். மேலும், முக்கியமாக சுமார் 18 வகையான விதைகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் மற்றும் சுமார் 26 வகையான விதைகள் இறக்குமதி செய்யப்படுவதாகவும், மேலும் தனியார் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு வகை விதைகளும் தாவர தனிமைப்படுத்தல் சேவை மூலம் சரிபார்க்கப்பட்டு முறையாக ஒழுங்குறுத்தப்படுத்தப்படுவதாகவும் கமத்தொழில் அமைச்சின் (பி. வ. அ.) / வ.அ. தொிவித்துள்ளார். கமத்தொழில் அமைச்சினால் வழங்கப்படும் கலப்பின விதைகளின் விலைகள் தனியார் துறையினர் வழங்கும் கலப்பின விதைகளின் விலைகளுடன் ஒப்பிடுகையில் அவை மிகவும் குறைவாக உள்ளதால் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் சலுகை விலையில் விதைகளை வழங்க முடியும் என (பி. வ. அ.) / வ.அ. தொிவித்துள்ளார்.

விவசாயத் திணைக்களத்தின் தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மூலம் அண்மையில் அறிமுகப்படுத்திய 2 புதிய மரக்கறிப் பயிர் இனங்களான 2 வட்டுக் காய் இனங்களும் மற்றும் 1 பூசனி இனமும் அடங்கலாக தற்போழுது விவசாயத் திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்படும் 20 மரக்கறி இனங்களில் 47 இனங்களும் மற்றும் 8 கலப்பினங்களும் அடங்கலாக விதைகள் உற்பத்தி செய்யப் பட்டு பயிரிடும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு கடினமான கரட்டு மற்றும் ஜப்பானிய பந்து முள்ளங்கி ஆகியவற்றின் விதைகள் உற்பத்தியில் விவசாயத் திணைக்களம் தற்போது கவனம் செலுத்தியுள்ளது.

உள்நாட்டு விதைகளின் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்தும் மற்றும் விதைகளின் இறக்குமதியை கட்டுப்படுத்தும் எதிர்பார்ப்பில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதைகளையும் மற்றும் உள்நாட்டு கலப்பின விதைகளையும் உற்பத்தி செய்வதற்கு அரசாங்க நிறுவனங்களுடனும், அரை அரசாங்க நிறுவனங்களுடனும் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடனும் இணைந்து விவசாயத் திணைக்களம் தற்போது ஒரு கூட்டு வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. அதன்படி, விதைகளின் இறக்குமதியை படிப்படியாக குறைக்க குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் (அரச மற்றும் தனியார் துறையை இணைந்து) தயாரிக்கப்பட்டு தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இங்கு அரச துறை மற்றும் தனியார் துறை ஆகிய துறைகளுக்கு தேவையான அடிப்படை விதைகளின் உற்பத்தி விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் விதைகளின் உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் மற்றும் உள்ளீடுகளையும் அரசாங்க நிறுவனங்களும், அரை அரசாங்க நிறுவனங்களும் மற்றும் தனியார் துறை நிறுவனங்களும் வழங்குகின்றன.

அதன்படி, தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்ற விவசாயப் புத்தாக்கத் திட்டம், தனியார் விவசாயிகளின் ஊடாக விதை உற்பத்தியாளர்களை உருவாக்கி,

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

	அவர்களை விதை உற்பத்தி தொழில்முனைவோராக மாற்றுவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் (பாதுகாப்பான கூடாரங்கள்) உள்ளீடுகளையும் மற்றும் தொழில் நுட்பத்தையும் வழங்குகின்றது. இந்தக் கருத் திட்டத்தின் மூலம் கண்டி மாவட்டத்தில் 75 விவசாயிகளுக்கு பாதுகாப்பான கூடார வசதிகள் செய்து வழங்கப்பட்டுள்ளன. உள்நாட்டுக் கலப்பின மரக்கறி விதைகளை உற்பத்தி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கருத் திட்டத்தின் கீழ் கலப்பின விதை உற்பத்தி செயற்பாடு 2023/24 பெரும்போகத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, FAO, KOPIA கருத் திட்டங்களின் மூலம் உள்நாட்டுக் கலப்பின விதைகளின் உற்பத்தியை அதிகரிக்கவும், உள்நாட்டு விதைகள் கிடைப்பதன் ஊடாக விதைகளின் விலையைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு விதை உற்பத்தியில் காலநிலை பாதிப்புகளினால் ஏற்படும் விலகல்களை தவிர்க்கும் வகையில், விதை உற்பத்தி பண்ணைகளில் பாதுகாப்பான கூடார மழை உறைகள், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு சொட்டு நீர் நீர்ப்பாசன முறைகள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. காய்கறி விதைகளின் இறக்குமதியை கட்டுப்படுத்துதல், உள்ளூர் விதை உற்பத்தியையும் மற்றும் தரத்தையும் உறுதி செய்தல், விநியோக வலையமைப்பை விரிவுபடுத்துதல், காய்கறி விதை உற்பத்தி பண்ணைகளை மேம்படுத்துதல் மற்றும் காய்கறி விதை உற்பத்தியை ஊக்குவித்தல் என்பவற்றின் நிமித்தம் 2023 ஆம் ஆண்டில் 1000 மில்லியன் ரூபா பெறுமதியான கருத் திட்டங்களுக்கான ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த ஆண்டு அந்தக் கருத் திட்ட அறிக்கையின் நிமித்தம் நிதி ஒதுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், விவசாயத் திணைக்களத்திற்கும் மற்றும் கமத்தொழில் அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் கீழ் உள்நாட்டு மரக்கறி விதை உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்தில் 2023 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Janaka Dharmakeerthi
Secretary
...ry of Agriculture and Plantation Industries
No.66/6, "Govijana Mandiraya",
...mahavatta Avenue, Battaramulla.

40

K.G.D.N. Jayasinghe
Chief Accounting ...
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

	• இதன்படி, துரித பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குண்டசாலை மற்றும் அம்பேபுஸ்ஸ ஆகிய பண்ணைகளில் 10 மழை நீர் கூடாரங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. குண்டசாலை பண்ணையில் 05 மழை நீர் கூடாரங்களை 2023.08.31 ஆம் திகதிக்குள் நிர்மாணித்து முடித்து 2023/24 பெரும்போகத்தில் இலிருந்து விதை உற்பத்திக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அம்பேபுஸ்ஸ பண்ணையில் அந்த நிர்மாணப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. • மேலும், குண்டசாலை பண்ணையில் 05 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு நீர்ப்பாசன வசதி முறைகள் புனரமைக்கப்பட்டு தற்போது பயிர்ச் செய்கைக்கு தயார்படுத்தப்பட்டுள்ளன. • மேலும் குண்டசாலை பண்ணைக்கு 05 மழை நீர் கூடாரங்களையும், வல்பிட்ட, பஸ்யால, வீரபன ஆகிய பண்ணைகளுக்கு 02 மழை நீர் கூடாரங்களையும் மற்றும் தெளிஜ்ஜவில பண்ணைக்கு 12 மழை நீர் கூடாரங்களையும் கமத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணித்து அவற்றை விதை உற்பத்திற்கு பயன்படுத்த ஏற்கனவே ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. • கமத்தொழில் அமைச்சின் நிதியின் கீழ் வால்பிட்ட பண்ணையில் நீர் விநியோக முறைமையையும் மற்றும் ஒரு விவசாயக் கிணற்றையும் அமைத்து காய்கறி விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. • விதைகள் கொள்வனவு மற்றும் பகிர்ந்தளிப்பு கருத் திட்டத்தின் மூலம் விவசாயத் திணைக்களத்திற்கு கிடைத்த 750 மில்லியன் ரூபா நிதியில் 75 மில்லியன் ரூபா நிதி காய்கறி விதைகள் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது 2023 ஆம் ஆண்டில் காய்கறி விதைகளின் 25 மெ.டொ. உற்பத்தியை ஒப்பந்த அடிப்படையிலான விதைகள் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2023.08.31 ஆம் திகதிக்குள் 53 மில்லியன் ரூபா நிதியை செலவிட்டு 18 மெ.டொ. உற்பத்தியை கொள்வனவு செய்ய முடிந்துள்ளது.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Minist... ...Plantation Industries
...80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

- இந்த ஒப்பந்த விதைகள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேலதிகமாக, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் அடிப்படை விதைகள் உற்பத்தி பண்ணைகளில் 10-12 மெ.டொ. அளவான அடிப்படை காய்கறி விதைகளை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், இறக்குமதி செய்யப்படும் இனங்களையும் மற்றும் சந்தையில் போட்டித் தன்மை உடைய காய்கறி வகைகளையும் உள்நாட்டில் இனப்பெருக்கம் செய்வதற்கான இனப்பெருக்க ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய மரபணு வளங்களினால் பயிர் இன விருத்தி செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அதிக கேள்வி நிலவுகின்ற உள்நாட்டு மரபணு வளங்களினாலும் அதே போல் நோய்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய இனங்களினாலும் மற்றும் புதிய சுவை முறைமையினாலும் போஞ்சி, கத்தரிக் காய், தக்காளி, கறி மிளகாய், தம்பள, பாகற் காய், இனிப்புக் கிழங்கு இனங்கள், வெள்ளரிரிக் காய், வெண்டிக் காய், புடோலங் காய், மேகெரல், பீர்க்கங் காய் முதலியவற்றுக்கு மரக்கறி இனப்பெருக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது, தோட்டக்கலைப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் விடுவிக்கப்பட்டுள்ள இறக்குமதி விதைகளுடன் போட்டியிடக் கூடிய உள்நாட்டில் வளர்க்கப்படும் பல காய்கறி இனங்களின் நிமித்தம் இனப்பெருக்க விதைகளும் மற்றும் தாய் விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதே கலப்பின இனங்களும் மற்றும் திறந்த மகரந்த சேர்க்கை இனங்களும் விவசாயத் திணைக்களத்தின் விதைகள் உற்பத்திப் பிரிவின் மூலம் கடந்த பயிர்ச் செய்கைப் போகத்தில் விவசாயிகளின் பங்களிப்புடன் உற்பத்தி செய்யப்பட்டன. எதிர்வருகின்ற பயிர்ச் செய்கைப் போகத்திலும் விதைகளை உற்பத்தி செய்ய தாய் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம், சந்தையில் மிகவும் போட்டித் தன்மை உடைய பிரபல்லியமான கலப்பினங்களான ஹோடி லேன இரி, அமந்தா ஆகிய கத்தரிக் காய் இனங்களினதும், பிரார்த்தனா கலப்பின கறி மிளகாய் இனங்களினதும், பாத்திய HORDI HY 3 தக்காளி இனங்களினதும், நீரோகி கலப்பின பாகற் காய் இனங்களினதும் விதைகள் உற்பத்தி செய்யப்

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

படுகின்றன. திறந்த மகரந்த சேர்க்கை இனங்களில் தின்னவேலி வெள்ளை இனப் பாகற் காய், மாத்தளை பச்சை தின்னவேலி (புடோலங் காய்), TA 2, MI short, வெண்டிக் காய் (பச்சை நிறம்) முதலியன அடங்குகின்றன. அதே போல் நுகர்வோரின் கேள்விக்கு ஏற்ற அதிக விளைச்சலை தருகின்ற தரத்தில் உயர்ந்த மரக்கறி இனங்களை இனப்பெருக்கம் செய்யும் செயற்பாடுகள் தோட்டக்கலைப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் சிபாரிசு செய்வதற்கு எதிர்பார்க்கும் 5 கலப்பின மற்றும் திறந்த மகரந்த சேர்க்கை இனங்களும் பயிர் செய்கைக்காக விடுவிக்கப்பட்டுள்ளன. மேலும் 5 கலப்பினங்கள் TAV, TVCN ஆராய்ச்சி மட்டத்தில் இந்தப் பயிர்ச் செய்கைப் போகத்தில் களப் பரிசீலனையின் நிமித்தம் விடுவிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் விரும்பும் இனங்களையும் மற்றும் விதைகளின் தேவைகளையும் இனங்காணும் பொருட்டு மாகாண தொழில் நுட்ப செயற்குழு கூட்டங்களை நடத்தியும் மற்றும் விவசாய திணைக்களத்தினதும், மாகாண விவசாய திணைக்களத்தினதும் பயிர் விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் கள கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. தற்போது, தோட்டக்கலைப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் சிபாரிசு செய்துள்ள காய்கறி இனங்களின் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கும் முகமாக, உற்பத்தி செயல்முறைக்கு தேவையான கலப்பின இனங்களின் விதைகளும் மற்றும் தாய் விதைகளும் தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த செயல்முறை, அனைத்து விதைகள் வளர்ப்பு சம்பந்தமான அலுவலர்களினதும் மற்றும் விதைகள் சான்றிதழ் சேவை நிலையத்தின் அலுவலர்களினதும் முழுமையான மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் விதை உற்பத்தி செயல்முறையின் நிமித்தம் விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் நிலையத்திற்கு விதைகள் வழங்கப்படுகின்றன. இந்த இனப்பெருக்க விதை உற்பத்தி செயல்முறையும் இந்தப் பயிர்ச் செய்கைப் போகங்களில் மேற்கொள்ளப்படும்.

விவசாயத் திணைக்களத்தினதும் மற்றும் மாகாண விவசாய திணைக்களங்களினதும் பயிர் விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் விவசாயிகளின் பயிர் தொடர்பான பிரச்சினைகளையும் மற்றும் பயிர் இனங்களையும் மற்றும் விதைகளின் தேவைகளையும் கண்டறிவதில் பெரும் பங்காற்றி வருகின்றனர். கண்டறிந்த பிரச்சினைகளுக்கு, தோட்டக்கலைப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும்

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

	அபிவிருத்தி நிலையம், காய்கறி இனங்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களையும் அத்தகைய நோய்களை ஏற்படுத்தும் பூச்சிகளையும் ஏற்கனவே கண்டறிந்து, புதிய பயிர் இனங்களை இனப்பெருக்கம் செய்யும் போது, அதிக நோய் எதிர்ப்புத் திறன் உடைய பயிர் இனங்களை இனப்பெருக்கம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போதுள்ள பயிர் இனங்களை விடவும் அதிக விளைச்சலைத் தரக் கூடிய மற்றும் நுகர்வோரின் தேவைகளுக்கு ஏற்ற பயிர் வகைகளை இனப்பெருக்கம் செய்வதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக கடந்த பயிர்ச் செய்கைப் போகத்தில் தரவு பகுப்பாய்வும், அடுத்த பயிர்ச் செய்கைப் போகத்திற்கான ஆராய்ச்சி திட்டமிடுகைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலே குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளின் பயனாக, மரக்கறிப் பயிர்களின் சராசரி விதை உற்பத்தி ஆண்டுக்கு 30,000 கிலோ கிராம் அளவில் காணப்படுகின்றது. எதிர்காலத்தில், தனியார் துறையினதும் மற்றும் அரச துறையினதும் கூட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் இந்த அளவை மேலும் 105,000 கிலோ கிராம்களாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. விவசாயத் திணைக்களம் சிபாரிசு செய்துள்ள விலையில் விதைகள் விற்பனை செய்யப்படுவதால் உள்நாட்டு விலை குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போதும் கூட, புதிய பயிர் இனங்களை அறிமுகப்படுத்தி பிரபல்லிப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் எதிர்காலத்தில் கலப்பின விதைகளின் உற்பத்தி அதிகரித்து, அந்தப் பயிர்களின் விதை இறக்குமதி 25-50% வரை குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation I
No 80/5, "Govijana Mandiray

K.G.D.N. Jayasinghe
Chief Accounting
Ministry of Agri
No. 80/5, "Gov
Rajamalwatta Avenue,
Battaramulla.

03. விவசாயத் திணைக்களத்தின் பதவியணியில் நிலவும் பற்றாக்குறை

திறமையான வளர்ப்பு விஞ்ஞானிகள் தனது பதவியணியில் இருந்தாலும் பணியாளர்களின் பற்றாக்குறையினால் விவசாயத் துறையின் பணிகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் வ.அ. தொிவித்தார். பல ஆண்டுகளாக நிறைவு பெறாது உள்ள வழக்கின் காரணமாக புதிய ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்ட்டமையும், 1210 பணியாளர்கள் உள்ளடங்கிய பதவியணியில் தற்போது 453 ஊழியர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றமையும் தெரியவந்தது.	இலங்கை விவசாய சேவையில் அப்போது 756 பதவி வெற்றிடங்கள் நிலவிய போதிலும், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த SC (FR) 283/2014 மனு 2021.03.08 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அந்த மனு சம்பந்தமாக ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு மனுதாரர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆகையால், 2020.06.30 ஆம் திகதியில் இலங்கை விவசாய சேவையின் தரம் III இல் நிலவிய 678 பதவி வெற்றிடங்களில் 310 பதவி வெற்றிடங்களுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கான ஒரு வர்த்தமானி அறிவித்தலும் மற்றும் திருத்திய தகைமைகளின் கீழ் மட்டுப்படுத்திய அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கான ஒரு வர்த்தமானி அறிவித்தலும் தனித் தனியாக தயாரிக்கப்பட்டு இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை 2023.02.19 ஆம் திகதியிலும் மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை 2023.04.08 ஆம் மற்றும் 09 ஆம் திகதிகளிலும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுள்ளன.
<u>சிபாரிசுகள் / பணிப்புரைகள்</u> இந்த வழக்குகளை விரைவில் தீர்த்து புதிய ஆட்சேர்ப்பை விரைவுபடுத்துமாறு குழு கமத்தொழில் அமைச்சின் பி.வ.அ. அதிகாரிக்கு பணிப்புரை விடுத்தது.	ஏற்கனவே மட்டுப்படுத்திய அடைப்படையில் பரீட்சைக்கு தோற்றி அந்தப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சாத்திகளுக்கு மத்தியில், பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இரண்டு மடங்குகள் அளவில் பரீட்சாத்திகளின் பட்டியல் பரீட்சைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கட்டமைந்த நேர்முகப் பரீட்சையை 2023.10.23 ஆம் திகதி முதல் 2023.10.26 ஆம் திகதி வரை நடத்த தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மட்டுப்படுத்திய அடிப்படையில் நிலவுகின்ற 148 பதவி வெற்றிடங்களை அந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுகின்ற பரீட்சாத்திகளுக்கு மத்தியிலிருந்து நிரப்ப எதிர்பார்க்கப்படுகின்றது. திறந்த அடிப்படையில் நிலவுகின்ற 162 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. அந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் இது வரை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படவில்லை. அந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 310 பதவி வெற்றிடங்களை நிரப்ப எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த ஆட்சேர்ப்புகளுக்குப் பிறகு, 2023.06.30 ஆம் திகதிக்கு, இலங்கை விவசாய சேவையில் திறந்த அடிப்படையில் 234 பதவி வெற்றிடங்களும் மற்றும் மட்டுப்படுத்திய அடிப்படையில் 215 பதவி வெற்றிடங்களும் என மொத்தம் 449

K.C.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

	பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றில், திறந்த அடிப்படையில் காணப்படும் 234 பதவி வெற்றிடங்களுக்கு "அரசாங்க நிறைவேற்றுத் துறைப் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் பொதுப் போட்டிப் பரீட்சையின்" மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளுமாறு பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், மட்டுப்படுத்திய அடிப்படையில் காணப்படும் 215 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் முகமாக விண்ணப்பங்களை அழைக்கும் ஒரு அறிவித்தலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and [illegible]
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla. 46

K.G.D.N. Jayasinghe
Chief Ac[illegible]
Ministry of A[illegible]
No. 80/5, "Gov[illegible]",
Rajamalwatta Avenue,
Battaramulla.

04. விதைகளுக்கு ஒரு கட்டுப்பாட்டு விலை இல்லாமை

கலப்பின விதைகளுக்கும் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கும் இடையேயான விலைகளிலும் மற்றும் விளைச்சல்களிலும் உள்ள வித்தியாசம் மற்றும் கமத்தொழில் அமைச்சினால் விற்பனை செய்யப்படும் அதே விதை வகையான விதைகளினதும் மற்றும் சந்தையில் உண்மையில் கிடைக்கும் விதைகளினதும் விலைகள் பல மடங்கு வேறுபடுதல் முதலிய விடயங்கள் பற்றி குழு வினவியது.

கலப்பின விதைகளில் பயன்படுத்தப்படும் "கலப்பின வீரியம்" என்ற எண்ணக்கருவின் காரணமாக உள்நாட்டு விதைகளுடன் ஒப்பிடும்போது கலப்பின விதைகள் அதிக விளைச்சலை தருவதாகவும், வேகமாக முளைத்து வளர்வதாகவும் மற்றும் உரங்களுக்கு அதிக அதிகளவில் பிரதிபலன்களை கொடுப்பதாகவும் கமத்தொழில் அமைச்சின் பி.வ.அ. / வ.அ. தெரிவித்தார்.

கமத்தொழில் அமைச்சினது கூற்றுப்படி, விதைகள் பற்றிய சட்டம் முன்னுரிமை விதைகளின் தரத்தை ஒழுங்குறுத்துவதாகவும், மேலும் விதைகளின் விலையை ஒழுங்குறுத்துவதற்கு எந்த சட்டஏற்பாடுகளும் கிடையாது எனவும் பி.வ.அ. / வ.அ. தெரிவித்தார்.

விதைகளின் விலை கட்டுப்பாடு தொடர்பான ஒழுங்குவிதிகளை தயாரித்தல்

விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி பிரகடனப் படுத்தப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைகள் சட்டத்தின்படி விதைகளின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போதுள்ள பிரச்சினைகள் மற்றும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.

காய்கறி விதைகள் உற்பத்தித் தொழிலின் தற்போதைய விலை நிலவரம்

தனியார் துறை திறந்த - மகரந்த சேர்க்கை இனங்களினதும் மற்றும் கலப்பினங்களினதும் விதைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் அதே வேளையில், அது அதிகளவில் இறக்குமதி செய்யப்படும், திறந்த - மகரந்த சேர்க்கை அல்லது கலப்பின விதைகளையும் விநியோகிக்கின்றது. காய்கறி பயிர்களின் உற்பத்தியில் ஏற்படும் உற்பத்தி செலவைக் கணக்கிடுவதில் விதைகளின் விலைகள் ஒரு முக்கியமான காரணியாக விளங்குகின்றது. விதைகளின் விலைகள் 3% முதல் 10% வரையான ஒரு பெறுமானத்தை எடுத்துக் கொள்கின்றன. மேலும் விதைகளின் விலைகள் பரவலாக வித்தியாசப்படுகின்றன. விதைகளின் விலைகள் பயிர், பயிர் இனம் (கலப்பின அல்லது திறந்த மகரந்த சேர்க்கை இனம்), (உள்ளூர், இறக்குமதி), தொழில்முனைவு (பொது, தனியார்), விளம்பரம் போன்றவற்றைப் பொறுத்து வேறுபடும்.

விதைகளின் சந்தை விலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகள்

1. விதைகளின் உற்பத்தி, ஏற்றியிறக்கல், பொதியிடுதல், சந்தைப்படுத்தல் செலவுகள் மற்றும் பங்குலாபம் ஆகியவற்றைப் பொறுத்து திறந்த மகரந்த சேர்க்கை செய்யப்பட்டுள்ள பயிர் இனங்களின் விதைகளின் விலைகள் வேறுபடும்.

2. உள்நாட்டு விதைகளின் உற்பத்தியை கருத்தில் கொள்ளும் போது, நீர் விநியோக முறைமைகள், பாதுகாப்பான கூடாரங்கள், பொதியிடுதல்

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

ஆகியன தொடர்பான செலவுகள் போன்றவை நிலையான செலவுகளைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாக கருதப்படலாம். உள்நாட்டு விதைகளின் உற்பத்திக்கு செலவாகும் வேறுபடும் செலவுகளாக, உழைப்பு, எரிபொருள், உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்கள், அறுவடை, நீர் முகாமைத்துவம், நோய் மற்றும் பூச்சி கட்டுப்பாடு, களை கட்டுப்பாடு முதலியவற்றுக்கான செலவுகளை பிரதான செலவுகளாகக் கொள்ளலாம்.

3. 2023 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைகள் சட்டம் விதைகளின் தரத்தை ஒழுங்குறுத்துவதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ள போதிலும், அது விதைகளின் விலைகளை ஒழுங்குறுத்துவதற்கான அதிகாரத்தை வழங்கவில்லை. எவ்வாறாயினும், தற்போது 05 முக்கிய வகைகளின் கீழ் (உள்நாட்டு திறந்த மகரந்த சேர்க்கை, உள்நாட்டு கலப்பினங்கள், இறக்குமதி செய்யப்படும் திறந்த மகரந்த சேர்க்கை, இறக்குமதி செய்யப்படும் கலப்பினங்கள், பாரம்பரிய இனங்கள்) மிகப் பெரிய இன விதைகள் (சுமார் 250 இனங்கள்) சந்தையில் கிடைக்கின்றன. அவற்றின் விலைகள் பரவலாக வேறுபடுகின்றன. எனவே, ஒவ்வொரு பயிர் வகைக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட்டாலும், இது மிகவும் சிக்கலான செயலாகவும், நடைமுறை சாத்தியமற்றதாகவும் இருக்கும். எனவே, மேற்கண்ட அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு ஒவ்வொரு பயிருக்கும் உச்ச விலையை நிர்ணயிப்பது சிறந்ததாகும்.

பிரேரணைகள்

1. உள்நாட்டு விதை இனங்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கலப்பினங்கள் மற்றும் திறந்த மகரந்த சேர்க்கை செய்யப்பட்டுள்ள விதை இனங்கள் என்பவற்றுக்கு விவசாயத் திணைக்களத்தினால் ஒரு குழுவின் மூலம் விதைகளின் விலைகளை சரியான நேரத்தில் நிர்ணயித்தல்.

2. பொது மற்றும் தனியார் துறைகளில் விதை உற்பத்தியை மேலும் வலுப்படுத்துதல் மற்றும் போட்டித் தன்மையை அதிகரித்தல்.

3. விவசாயிகளினாலும், கமக்காரர் அமைப்புகளினாலும் மற்றும் தனியார் துறையினரினாலும் உள்நாட்டு விதைகளை உற்பத்தி செய்வதற்கு

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

தேவையான வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் மற்றும் உள்ளீடுகளுக்கு ஊக்குவிப்பு தொகைகளை வழங்குதல்.

4. பயிர்ச் செய்கைப் போக ஆரம்பத்தில் விளைநிலங்களுக்கு விதைகளை எடுத்துச் செல்வதற்கான வேலைத் திட்டத்தை விரிவுபடுத்துதல் மற்றும் அதன் நிமித்தம் அரச துறையின் வசதிகளை மேம்படுத்துதல்.

5. கமத்தொழில் அமைச்சின் தலையீட்டில், தனியார் துறையினரின் பங்களிப்புடன், அதிகளவில் பயிரிடப்படும் அதிக விலை வாய்ந்த பயிர் விதைகளுக்கு மாத்திரம் விற்பனை விலையை ஒழுங்குறுத்தும் ஒரு பொறிமுறையை தயாரித்தல்.

6. விதை உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் ஒரு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

விதைகளுக்கு ஒரு உச்ச விலை நிர்ணய குழுவை நியமிப்பதே பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டது. கமத்தொழில் அமைச்சில் நடைபெற்ற தேசிய விதைகள் பற்றிய குழுவின் கூட்டத்தில் (தனியார் துறை அடங்கலாக) இது பற்றி ஆராயப்பட்டது. இதன் போது தனியார் துறையினர் விலைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி தெளிவுபடுத்தினர். தனியார் துறையினருடன் அரசாங்கம் மேலும் கலந்துரையாடி விலைகளின் நிர்ணயம் பற்றி முடிவெடுப்பது பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, 2023.11.07 ஆம் திகதி அனைத்து அக்கறையுடைய தரப்புகளுடனான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
[illegible], "Govijana Mandiraya",
[illegible] Avenue, Battaramulla.

05. ஒரு தேசிய விவசாயத் திட்டத்தின் அவசியம்

நாட்டின் தேவைக்கு ஏற்ப, ஒவ்வொரு காலநிலைக்கும் ஏற்றவாறு ஒவ்வொரு பயிரையும் பயிரிடுவதற்கான காலங்கள் தொடர்பாக சம்பந்தப்படும் அனைத்து அரச நிறுவனங்களினதும் தலையீட்டில் தயாரித்த தேசிய விவசாயத் திட்டத்தின் அவசியம் பற்றி குழு கவனம் செலுத்தியது.

அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் கமத்தொழில் அமைச்சில் பலவீனங்களும் தடைகளும் உள்ளதை ஏற்றுக் கொள்வதாக பி.வ.அ./ வ.அ. தொிவித்தார். தொடர்புடைய அனைத்து தரப்புகளையும் ஒன்றிணைத்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிபாரிசுகள் / பணிப்புரைகள்

நாட்டின் தேவைக்கு ஏற்ப, ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் காலங்களும் மற்றும் அளவுகளும் தொடர்பான திட்டத்தை முறையாக செயல்படுத்தும் போது தொடர்புடைய திணைக்களங்களிலும் மற்றும் நிறுவனங்களிலும் தடைகளும் மற்றும் சிக்கல்லும் இருந்தால், குழு அவை தொடர்பான ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு விவசாய அமைச்சின் பி.வ.அ./ வ.அ. இற்கு பணிப்புரை விடுத்தது.

சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், அந்த பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது

விதை நெல் உற்பத்தியிலும் மற்றும் அதன் விநியோகத்திலும் விவசாயத் திணைக்களத்தின் பங்களிப்பு

I. விதை நெல் உற்பத்தி

ஆண்டுதோறும் சிறுபோகத்திலும் மற்றும் பெரும்போகத்திலும் நெல்லை உற்பத்தி செய்வதற்கு 1,300,000 ஹெக்டேர்களின் நிமித்தம் 6,500,000 புசல் விதை நெல்லை உற்பத்தி செய்ய தேவையான அடிப்படை நெல் விதைகளாக 100% அடிப்படை விதை நெல்லும் மற்றும் பதிவாகியுள்ள 90% விதை நெல்லும் விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் பண்ணைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றன. **(அட்டவணை - 01)**

அட்டவணை 01 : விதை நெல் உற்பத்தி

பயிர்த் தொகுதி	பயிரிடப் படும் அளவு (ஹெக்.)	விதைகளின் தேவை அளவு		விதைகளின் வருடாந்த மொத்த தேவை அளவு
		சிறுபோகம்	பெரும்போகம்	
நெல் பயிர்	1,300,000	2,500,000 (புசல்)	4,000,000 (புசல்)	6,500,000 (புசல்)
ஏனைய வயல் பயிர்	232,700	1,946 (மெ. டொ.)	3,758 (மெ. டொ.)	5,704 (மெ. டொ.)
மரக்கறிப் பயிர்	70,650	312,865 (கி. கி.)	385,067 (கி. கி.)	697,932 (கி. கி.)
உருளைக் கிழங்குப் பயிர்	5,500	6,200 (மெ. டொ.)	6,500 (மெ. டொ.)	12,700 (மெ. டொ.)

மேலும், அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தரத்தில் உயர்ந்த புதிய விதை இனங்கள் அடங்கலாக தீவின் வெவ்வேறு காலநிலை வலயங்களுக்கு ஏற்ற 42 வகையான நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும், எதிர்வரும் பயிர்ச் செய்கைப் போகத்திற்கு தேவையான அளவு விதைகளை உற்பத்தி செய்யக் கூடிய வகையில், அடிப்படை விதைகள் மாகாணங்களுக்கு இடையில், மாகாணங்களுக்கும், மகாவலி அதிகார சபைக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் துறை உற்பத்தித் தரப்புகளுக்கு வழங்கப்படுகின்றன.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

மற்றும் அந்த பரிந்துரைகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பன பற்றிய ஆலோசனைகள் தொடர்பான ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	I. <u>ஏனைய வயல் பயிர்கள்</u> நெல் தவிர, உள்நாட்டு விதைகளின் தேவையில் அதிக தேவையுடைய பயிர் இனம், ஏனைய வயல் பயிர்கள் ஆகும். இந்த இனங்களில் வெண்டிக் காய், நிலக் கடலை, சோயா, சோளம், உழுந்து, கவ்பி, குரக்கன், எள்ளு, வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்கள் உள்ளடங்குகின்றன. இந்தப் பயிர்களின் அடிப்படை விதைகள் அரசாங்கத்தின் விதை உற்பத்தி பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பதிவு செய்துள்ள மற்றும் ஒப்பந்தம் செய்துள்ள விதை உற்பத்தி விவசாயிகளினாலும் இந்த அடிப்படை விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால், தேசிய அடிப்படை விதைகளின் தேவையில் 100% விதைகள் வெண்டிக் காய், உழுந்து, குரக்கன், கவ்பி, எள்ளு, சோயா, மிளகாய் முதலிய பயிர்களிலிருந்து வழங்கப் படுகின்றன. 20% நிலக் கடலையும், 12.5% வெங்காயமும் தற்போது வழங்கப்படுகின்றன. மேலும் சின்ன வெங்காய அடிப்படை விதைகளை உற்பத்தி செய்யும் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், கலப்பின சோளம் தேசிய விதைகளின் தேவையில் 15% தாய் விதையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த அளவு 2025-2028 ஆம் ஆண்டில் தேசியத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது . அதன்படி, தற்போது 100,000 கிலோ கிராம் ஏனைய வயல் பயிர்களின் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. இது தவிர, விவசாயிகளின் விதைத் தேவையை பூர்த்தி செய்ய, சான்று பெற்ற 800,000 கி.கி. விதைகள் விவசாயிகளுக்கு நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றன. இங்கு ஆண்டுதோறும் பாசிப்பயறு, உழுந்து, குரக்கன், எள்ளு, சோயா, மிளகாய் போன்ற பயிர்களின் தேசிய விதைத் தேவையில் 25% முதல் 50% வரையான விதைகள் ஆண்டுதோறும் விநியோகிக்கப்படுகின்றன. இது தவிர மிளகாய் விதை, வெங்காய மற்றும் சோள விதைகள் என்பவற்றின் உற்பத்திற்கு தனியார் துறையினரும் பங்களிப்பு செய்து வருகின்றனர். ஆண்டிற்கான தேவைக்கு ஏற்ப இந்த விதைகள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. **(அட்டவணை 02)**

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

அட்டவணை 02: மேலதிக உணவுப் பயிர் விதைகளை விநியோகிக்கும் செயற்பாடு பற்றிய விபரம்

பயிர்		தேவைப் படும் மொத்த விதைகள் (மெ. டொ.)	உள்நாட்டு விதைகள் உற்பத்தி					இறக்குமதி (மெ. டொ.)	%
			வி. தி. (மெ. டொ.)	விவசாயிகள் மற்றும் தனியார் துறை	ASMP (மெ. டொ.)	முழு மொத்தம் (மெ. டொ.)	%		
பயறு		575	170	405		575	100%		
உழுந்து		500	150	350		500	100%		
கவ்பி		700	45	655		700	100%		
நிலக் கடலை		2000	100	1892	8	2000	100%		
சோயா		300	130	170		300	100%		
குரக்கன்		41	11	30		41	100%		
எள்ளு		105	24	81		105	100%		
சோளம்	திறந்த மகரந்த சேர்க்கை	76	76	0		76	100%		
	கலப்பினம் (F1)	1368	50	0	90	140	10%	1228	90%
மிளகாய்	திறந்த மகரந்த சேர்க்கை	10	6	4		10	100%		
	கலப்பினம் (F1)	3	0.3	1.9	0.5	2.7	90%	0.3	10%
பொலிய வெங்காயம்		26		13	10	23	89%	3	11%
மொத்தம்		**5704.3**	**762.3**	**3602.2**	**108.5**	**4473**		**1231.3**	

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

III. மரக்கறி விதைகள்

விவசாயத் திணைக்களம் சிபாரிசு செய்துள்ள 19 காய்கறி பயிர்களில் 72 இனங்களின் அடிப்படை விதைகள் அரசாங்கத்தின் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விவசாயிகளுடன் செய்துள்ள ஒப்பந்த முறைமை மற்றும் தனியார் துறையின் உற்பத்தி பங்களிப்பு ஆகியவற்றின் மூலம் உள்நாட்டு காய்கறி விதைகளின் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது. **(அட்டவணை - 03)**

அட்டவணை 03 : தேசிய மரக்கறி விதைகள் தேவை பற்றிய விபரம்

பயிர்	விதைகள் தேவை (ஹெக் / கி. கி.)	பகுதி (ஹெக்டேயர்)			விதைகளின் தேவை அளவு (கி. கி.)		
		சிறு போகம்	பெரும் போகம்	மொத்தம்	சிறு போகம்	பெரும் போகம்	மொத்தம்
போஞ்சி	50	3,500	4,500	8,000	175,000	225,000	400,000
மேகெரல்	20	4,500	4,500	9,000	90,000	90,000	180,000
வெண்டிக் காய்	4.5	3,200	4,400	7,600	14,400	19,800	34,200
பாகற் காய்	6	1,600	2,500	4,100	9,600	15,000	24,600
ராபு	5	1,300	1,800	3,100	6,500	9,000	15,500
பீர்க்கங் காய்	3	1,500	3,000	4,500	4,500	9,000	13, 500
புடோலங் காய்	4	1,350	1,400	2,750	5,400	5,600	11, 000
வட்டக் காய்	1	2,800	4,950	7,750	2,800	4,950	7,750
கறி மிளகாய்	1	1,500	2,100	3,600	1,500	2,100	3,600
வெள்ளரிக் காய்	1	1,200	2,000	3,200	1,200	2,000	3,200
கத்தரிக் காய்	0.25	4,500	6,150	10,650	1,125	1,537	2,662
தக்காளி	0.3	2,800	3,600	6,400	840	1,080	1,920
மொத்தம்		**29,750**	**40,900**	**70,650**	**312,865**	**385,067**	**697,932**

கோவா, பீற்றூட்டு, லீக்ஸ், ப்ரோக்கோலி போன்றவற்றின் விதைகளை உள்நாட்டில் தற்போதுள்ள சாதாரண தட்பவெப்ப நிலையிலும் சாதாரண விதை உற்பத்தி முறைகளிலும் உற்பத்தி செய்ய முடியாது. எனவே, இந்த விதைகள், அவற்றின் தேவைக்கு ஏற்ப இறக்குமதி

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

செய்யப்படுகின்றன. இந்த விதைகளின் உற்பத்திக்கு ஒழுங்குறுத்துகை நிலைமைகள் மற்றும் விஷேட தொழில் நுட்ப முறைகள் என்பன அவசியம். இப்போதும் ஆராய்ச்சி துறைகள் இதற்கு தேவையான தொழில்நுட்ப முறைகளை கண்டறிந்து அந்த முறைகளை களத்தில் சோதித்து வருகின்றன. இதன்படி, இறக்குமதி செய்யப்படும் விதைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து, நடுத்தர கால திட்டமிடுகை கட்டத்தில் விவசாயிகளுக்கு விதைகளை வழங்குவதற்கு இலக்குக் கொள்ளப்பட்டுள்ளது. **(புகைப்படம் 01)**



உருப் படம் 01 : மீபிலிமான அரசாங்க விதைகள் உற்பத்திப் பண்ணையில் விதைகளை (புதிய குரோடா) உற்பத்தி செய்தல்

விவசாயத் திணைக்களம் வழங்கும் அடிப்படை விதைகளை பயன்படுத்தி தனியார் துறையும் உள்நாட்டு விதைகள் உற்பத்திற்கு பங்களிக்கின்றன **(அட்டவணை 04)**

அட்டவணை 04 : 2022/23 பெரும்போகத்திற்கு விதைகள் உற்பத்திப் பண்ணைகளுக்கும் மற்றும் தனியார் துறையினருக்கும் வழங்கப்பட்டுள்ள அடிப்படை விதைகளின் அளவு மற்றும் எதிர்பார்த்த விதைகளின் அளவு பற்றிய விபரம்

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

பயிர்	தேசிய விதைகள் தேவைப்பாடு (கி. கி.)	தனியார் துறைக்கு		தேசிய விதைகள் தேவைப்பாட்டில் வீதமாக %
		விநியோகித்த அடிப்படை விதைகளின் அளவு (கி. கி.)	எதிர்பார்த்த ஒட்டுமொத்த விதைகளின் அளவு (கி. கி.)	
புடோலங் காய்	11,000	67	7313	66
வெண்டிக் காய்	34,200	154.3	21383	63
ராபு	15,500	45	6567	42
பீர்க்கங் காய்	13,500	30	2820	21
வெள்ளிரிக் காய்	3200	1.6	554	17
தக்காளி	1,920	1.53	270.85	14
கறி மிளகாய்	3,600	2.6	412.5	11
மே கெரல்	180,000	199	7636	4
பாகற் காய்	24,600	7.3	450	2
கத்தரிக் காய்	2662	0.1	50	2
போஞ்சி	400,000	25	500	0
மொத்தம்	**690,182**	**533**	**47,956**	

இது தவிர, பாரம்பரிய மற்றும் பிற நவீன உள்ளூர் இனங்களின் விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்கிறார்கள். இப்போதெல்லாம், விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெறுவதற்காக கலப்பின பயிர் விதைகளை நாடுகின்றனர். மேலும் இந்த கலப்பின பயிர் இனங்களின் விதைகள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. இருந்த போதிலும், விவசாயத் திணைக்களம் ஏற்கனவே உள்நாட்டு கலப்பின பயிர் இனங்களின் (கத்தரி, மீன் மிளகு, தக்காளி, பாகற் காய், வெள்ளரிக் காய்) விதைகளை அரசாங்க விதைகள் உற்பத்திப் பண்ணைகளிலிருந்தும், விவசாயத் திணைக்களத்திலிருந்தும் தனியார் நிறுவனங்களுக்கும், அரை அரச நிறுவனங்களுக்கும் (மகாவலி) மற்றும் தனியார் விவசாயிகளுக்கும் வழங்கி, விதைகளின் உற்பத்தியை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது **(அட்டவணை 05).**

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

அட்டவணை 05 : தற்போதைய உள்நாட்டு மரக்கறி விதைகள் விநியோகம் பற்றிய விபரம்

பயிர்	தேவைப்படும் மொத்த விதைகளின் அயவு (கி. கி.)	உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் அளவு (கி. கி.)	%	இறக்குமதி செய்யப்படும் விதைகளின் அளவு (கி. கி.)	%
புடோலங் காய்	11,000	11,000	100	0	0
மே கெரல்	180,000	168,000	93	12,000	7
பாகற் காய்	24,600	22,000	89	2,600	11
கத்தரிக் காய்	2,662	2,100	79	562	21
போஞ்சி	400,000	254,000	64	146,000	37
வெண்டிக் காய்	34,200	21,000	61	13,200	39
பீர்க்கங் காய்	13,500	6,000	44	7,500	56
கறி மிளகாய்	3,600	1,600	44	400	56
ராபு	15,500	6,000	39	11,500	61
தக்காளி	1,920	520	27	1,400	73
வெள்ளரிக் காய்	3,200	730	23	2,470	77
வட்டக் காய்	7,750	500	6	7,250	94
மொத்தம்	**697,932**	**493,450**	**71**	**203,882**	**29**

அதிக விளைச்சலைத் தரக் கூடிய மற்றும் தரத்தில் உயர்ந்த உள்நாட்டு கலப்பின பயிர்களினதும் மற்றும் நவீன பயிர் இனங்களினதும் விதைகளின் உற்பத்தியை வலுப்படுத்துவதன் மூலம் இறக்குமதி செய்யப்படும் விதைகளின் அளவைக் குறைப்பதற்கு விவசாயத் திணைக்களம் அரச துறையின் பல கருத் திட்டங்களுடனும் மற்றும் தனியார் துறைக் கருத் திட்டங்களுடனும் ஒன்றிணைந்து குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால கருத் திட்டங்கள் என மூன்று கட்டங்கள் அடங்கிய கருத் திட்டங்களை விவசாயத் திணைக்களம் செயற்படுத்தியுள்ளது **(அட்டவணை 06).**

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

அட்டவணை 06 : இறக்குமதி செய்யப்படும் விதைகளின் அளவுகளை குறைப்பதற்கான விதைகள் உற்பத்தித் திட்டம் பற்றிய விபரம்

பயிர்	இறக்குமதி செய்யப் படும் விதைகளின் அளவு (உள்நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டிய விதைகளின் அளவு (கி. கி.)	குறுங்கால % (2023-2025)	நடுத்தர கால % (2026-2028)	நீண்டகால % (2028-2030)
வெண்டிக் காய்	13,200	80	100	100
போஞ்சி	146,000	80	100	100
கத்தரிக் காய்	562	90	100	100
கறி மிளகாய்	400	10	25	100
தக்காளி	1,400	25	50	100
மே கெரல்	12,000	90	100	100
வத்தவுக் காய்	10,000	20	40	80
பாகற் காய்	2,600	25	60	75
வெள்ளிரிக் காய்	2,470	5	25	75
புடோங் காய்	7,500	5	30	75
வட்டக் காய்	7,230	5	20	75
ராபு	11,500	5	40	50
கரட்டு	1,400	5	25	40
மொத்தம்	**216,262**			

மேற்குறித்த கருத் திட்டத்தை செயற்படுத்தும் வகையில், தரத்தில் உயர்ந்த அதிக விளைச்சலைத் தருகின்ற புதிய பயிர் இனங்களின் விதைகளை பெருக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ள விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான பிரிவுகளின் மூலம், நாட்டில் விதைகளினதும் மற்றும் நடுகைப் பொருட்களினதும் தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை விதைப் பெருக்கம் செய்தல், விநியோகித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 5 முக்கிய பயிர் இனங்களின் கீழ் உள்நாட்டு விதைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் வருடாந்தம் நாட்டின் தேவைக்கேற்ப விதைகள் உற்பத்தி செய்யப்படும் காலங்கள் மற்றும் அளவுகள் என்பன தொடர்பான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, ஏற்படும் பிரச்சினைகளும் மற்றும் தடைகளும் சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஒருங்கிணைப்பில் தீர்க்கப்படும் என்பதை குறிப்பிடுவதற்கு விரும்புகின்றோம்.

பிரச்சினைகள்	பிரேரணைகள்
(1.1.) தனியார் துறையினரால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதைகளினதும் மற்றும் உள்நாட்டு விதை இனங்களினதும், விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விதைகளினதும் தரவுகள் இல்லாததால், விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதும் மற்றும் இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதும் பிரச்சினைக்குரிய விடயமாக மாறியுள்ளது.	கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் விதை உற்பத்தி பற்றிய தகவல் முறைமையை நிறுவுதல் மற்றும் அதன்படி உற்பத்தி செய்யப்படும் விதையின் அளவு மற்றும் அந்தந்த அக்கறையுடைய தரப்புகளினால் இறக்குமதி செய்யப்படும் விதையின் அளவு பற்றிய தேசிய ஒருமித்த கருத்தை உருவாக்குதல் மற்றும் முறையான கண்காணிப்பு முறைமையை தயாரித்தல்.
(1.2.) இனப்பெருக்க விதை உற்பத்தி 10 ஆராய்ச்சி நிறுவனங்களிலும், அடிப்படை விதை உற்பத்தி 16 அரச விதை உற்பத்தி பண்ணைகளிலும் செய்யப்படுகின்றது. இந்த விதை உற்பத்தி நடவடிக்கைகளில் பெரும்பாலானவை திறந்தவெளியில் மேற்கொள்ளப்படுகின்றன, மேலும் அடிக்கடி ஏற்படும் எதிர்பாராத பாதகமான வானிலை காரணமாக, எதிர்பார்க்கப்படும் விளைச்சல் கிடைப்பதில்லை. சிபாரிசு செய்யப்பட்டுள்ள தரத்திற்கு இணங்காததால் விதைகள் நிராகரிக்கப்படுகின்றன.	பாதுகாப்பான கூடாரங்கள் மற்றும் மழை நீர் கூடாரங்கள், துண் நீர்ப்பாசன முறைமைகள் போன்ற மேம்பட்ட பயிர்ச் செய்கை நுட்பங்களைப் பயன்படுத்துதல். விதை உற்பத்திக்கு தேவையான உள்ளீடுகளை (விவசாய இரசாயனங்கள், உரங்கள், நிலத்தை தயார்படுத்துவதற்கு தேவையான எரிபொருள் போன்றவை) சரியான அளவிலும் மற்றும் சரியான நேரத்திலும் வழங்குதல்.
(1.3.) விதை உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான விவசாய வல்லுநர்கள் மற்றும் பிற தொழில் நுட்ப பணியாளர்கள், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் அடங்கலாக தொழிலாளர்கள் பற்றாக்குறையால் திட்டமிட்டபடி செயற்படுத்த இயலாது போனமை.	விதை உற்பத்தியின் முன்னுரிமையைக் கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் அந்தந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பை தொடர்ந்து மேற்கொள்ள வாய்ப்பு அளித்தல்.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

	(1.4.) உள்நாட்டு காய்கறி விதை உற்பத்தியை மேம்படுத்துவதில் விதை சேமிப்புக்கு தேவையான குளிர் சேமிப்பு வசதிகள் போதியளவில் இல்லாமை.	அடிப்படை விதைகளையும், தரமான விதைகளையும் மற்றும் தாங்கல் விதைகளையும் களஞ்சியப்படுத்துவதற்கு தற்போதுள்ள 70 மெ.டொ. கொள்ளளவுடைய குளிரூட்டல் களஞ்சிய வசதிகளின் கொள்ளளவை 170 மெ.டொ. ஆக அதிகரித்தல்.
	(1.5.) தரமான உள்நாட்டு விதை உற்பத்தியில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் மிகவும் கஷ்டமான பிரதேசங்களில் காணப்படுகின்றமை. அந்த இடங்களில் பணிபுரிகின்ற அலுவலர்களுக்கு குறைந்தளவு வசதிகள் இருக்கும் காரணத்தினால் நீண்டநேரம் கடமையில் ஈடுபடுத்த முடியாததால் மேற்பார்வை பதவியணி போதாதுள்ளது.	பண்ணைகளில் பணிபுரியும் ஊழியர்களை ஈர்க்க போதுமான வசதிகளையும் மற்றும் கொடுப்பனவுகளையும் வழங்குதல். தொலைதூரப் பகுதிகளில் உள்ள அரசாங்க உத்தியோபூர்வ இல்லங்களில் வசிக்கும் அலுவலர்களை / ஊழியர்களை வீட்டு வாடகை செலுத்துவதில் இருந்து விடுவித்தல்.
	(1.6.) விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பண்ணைகள் / நிறுவனங்கள் விசாலமான நிலங்களில் / பிரதேசங்களில் பரவலாக காணப்படுவதால் களப் பணிக்கும் மற்றும் கண்காணிப்புக்கும் போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லாமை. (தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு வாரத்திற்கு 4 லீற்றரும் மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு வாரத்திற்கு 20 லீற்றரும் ஒருபோதும் போதுமானதல்ல)	போதுமான போக்குவரத்து வசதிகளை (எரிபொருள் மற்றும் வாகனங்கள்) வழங்குதல். போதுமான எரிபொருள்களையும் வழங்குதல்.
	(1.7.) பயிர்களை நடுகை பண்ணும் காலத்திலும் மற்றும் அறுவடை செய்யும் காலத்திலும் நாளாந்த தொழிலாளர்கள் இல்லாததால், சரியான முறையில் பயிர்களை தாபிக்க முடியாது போகுதல் மற்றும் பயிர்களின் சேதங்கள் மற்றும் அறுவடை செய்வதில் தாமதம் மற்றும் உற்பத்தி செய்த விதைகளின் தரம் குறைதல் முதலிய காணரங்களினால் நிராகரிக்கப்படுவதற்கான அதிக வாய்ப்பு இருக்கின்றமை.	பண்ணைகளின் வருடாந்த தொழிலாளர் மதிப்பீட்டின் வரையறைக்குள் சாதாரண தொழிலாளர்களை (ஒப்பந்தம்) பணியில் ஈடுபடுத்த (பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 25/2004 -தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு முன்பிருந்த சுற்றறிக்கைக்கு இணங்க) அனுமதித்தல். நிரந்தர தொழிலாளர் பதவியில் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.
	(1.8.) ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களுக்கு தற்போது போதியளவு ஊதியம் வழங்கப்படாததால், அந்த தொழிலாளர்கள் நிறுவனத்திற்கு வெளியே உள்ள பிற வேலைகளுக்கு செல்கின்றமை.	ஒப்பந்த தொழிலாளர்களின் ஊதியத்தை போதியளவில் இற்றைப்படுத்துதல்.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

(1.9.) திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் விதை உற்பத்திப் பயிர்கள் காட்டு விலங்குகளினால் (யானைகள், மயில்கள்)	விதை உற்பத்தி நடவடிக்கைகளை முன்னுரிமைப் பணியாகக் கருதி விதை உற்பத்தி பண்ணைகளைப் பாதுகாத்தல்.
(1.10.) விதை உற்பத்தி பண்ணைகளுக்கு நீர்ப்பாசன நீர் விநியோகத்தில் முன்னுரிமை கிடையாமை.	விதை உற்பத்தி பண்ணைகளுக்கு நீர்ப்பாசன நீரை விடுவிப்பதற்கு முன்னுரிமை அளிக்க ஒரு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல்.
(1.11.) விவசாய உள்ளீடுகளை பெறுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக ஒப்பந்த மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் விதை உற்பத்தி செயல்முறையிலிருந்து விலகுதல்.	விதை உற்பத்தியாளர்களுக்கு உள்ளீடுகளில் முன்னுரிமை வழங்குவதற்கான ஒரு முறையியலை தயாரித்தல்.
(1.12.) விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகை மூலப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம் போதியளவு அடிப்படை விதைகளை உற்பத்தி செய்தாலும், அந்த விதைகளைப் பெருக்கி இலங்கையில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான சான்று பெற்ற விதைகளை வழங்குவதற்கு மாகாண விவசாயத் திணைக்களங்களிடமும் இலங்கை மகாவலி அதிகார சபையிடமும் இருந்து போதிய ஆதரவு கிடையாமை. (1.13.) தேசிய விதை உற்பத்தித் திட்டத்தை வலுப்படுத்துவதற்கு மாகாண சபைகள் மற்றும் மகாவலி அதிகார சபை ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் முறையியல்களின் நிமித்தம் AMA/20/1838/323/019 ஆம் இலக்க 2020.12.15 ஆம் திகதிய அமைச்சரவை கடிதத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ள போதிலும், மேற்படி நிறுவனங்கள் போதியளவு நடவடிக்கை எடுக்காமை.	ஒரு தேசிய நிகழ்ச்சித் திட்டமாக விதை உற்பத்தியை சம்பந்தப்படும் உரிய நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ள விவசாய திணைக்களத்திற்கு தேவையான அதிகா ரத்தை வழங்குதல்.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

காட்டு யானைகளினால் தனது திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் எதிர்கொள்ளும் இடையூறுகளும் மற்றும் கஷ்டங்களும் பற்றி வ.அ. இங்கு கருத்து தெரிவித்தார்.

சிபாரிசுகள் / பணிப்புரைகள்

உள்நாட்டில் விதைகளை உற்பத்தி செய்யும் பணியில், உத்தியோகத்தர்கள் தமது பணியை சரியாக மேற்கொள்வதை தடுக்கும் நிர்வாக அல்லது முகாமைத்துவ பிரச்சினைகள் ஏதேனும் இருந்தால், அந்தப் பிரச்சினைகளை / தடைகளை எப்படித் தீர்க்கலாம் என்பது பற்றி அறிக்கையிடுமாறு குழு, கமத்தொழில் அமைச்சின் பி.வ.அ. / வ.அ. இற்கு பணிப்புரை விடுத்தது.

விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் பிரிவின் கீழ் 29 பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பண்ணைகளில் விதை நெல், மேலதிக உணவுப் பயிர்களின் விதைகள், காய்கறி விதைகள், உருளைக்கிழங்கு விதைகள் ஆகிய விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த விதைகளை உற்பத்தி செய்யும் போது, தற்போதுள்ள மனித வளங்களும் மற்றும் பௌதீக வளங்களும், காலநிலையும், நீர்ப்பாசன வசதிகளும், வன விலங்குகளின் சேதங்களும் மற்றும் பல்வேறு சட்டங்களும் பண்ணைகளை பயனுள்ளதாகவும் மற்றும் திறமையாகவும் பராமரிக்கும் இலக்கையும் மற்றும் விளைச்சல் பெறும் இலக்கையும் பாதிக்கின்றமை அவதானிக்கப்படுகின்றது.

I). விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒப்பிடும் போது பண்ணையில் அவதானிக்கப்படும் தொழிலாளர்களின் பற்றாக்குறை

ஒவ்வொரு விதை உற்பத்திப் பயிர்ச் செய்கையும் மழை ஆரம்பிக்கும் காலத்திலோ அல்லது நீர்ப்பாசனத்தின் மூலம் ஆரம்பமாகும் காலத்திலோ, அறுவடை செய்து அந்த அறுவடைகள் பதனிடப்படும் காலத்திலோ, மழை இல்லாத காலத்திலோ மேற்கொள்ளக் கூடிய வகையில் திட்டமிடப்படுதல் வேண்டும். மேலும், ஒரு பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தினுள் குறிப்பாக தொழிலாளர்களின் தேவையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதால், தொழிலாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வது ஒரு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. பியர்ச் செய்கை போத்தின் ஆரம்பத்திலும் மற்றும் அறுவடை செய்து அந்த அறுவடைகள் பதனிடப்படும் காலப் பகுதியிலும் தொழிலாளர்களின் உச்ச தேவையை பண்ணைகளிலேயே உருவாக்கி, அந்தத் தேவையை பண்ணைகளுக்கு பெற்றுக் கொடுக்க வாய்ப்பு இல்லாததால் பயிர்களை நடும் காலமும், அறுவடை செய்யும் காலமும், பதனிடும் காலமும் அதிகமாகுகின்றன. இதனால் காலநிலை சார்ந்த பிரச்சினைகளுக்கும் மற்றும் ஏனைய பல பிரச்சினைகளுக்கும் பயிர்கள் உள்ளாகுவதால், இறுதி விளைவாக எதிர்பார்த்த விளைச்சல் கிடையாமலும் மற்றும் இலக்குக் கொள்ளப்படும் காலத்தினுள் விவசாயிகளுக்கு விதைகளை விநியோகிக்க இயலாமலும் போகுகின்றது. இதற்கு ஒரு தீர்வாக கீழ்காணும் பிரேரணைகள் முன்வைக்கப்படுகின்றன.

a). பண்ணைகளுக்கு தற்போது இணைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை தாண்டி பயிர்ச் செய்கைப் போக அமைப்பில் தொழிலாளர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் அதிகாரத்தை வழங்குதல்.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

	b). பண்ணைக்கு சொந்தமான தொழிலாளர்களின் எண்ணிக்கையினால் செய்ய முடியாத இனங்காணப்பட்டுள்ள பணிகளின் அலகுகளுக்கு மதிப்பீட்டு முறையை தயாரித்து அந்த மதிப்பீட்டு முறையின்படி பணிகளை நிறைவேற்றிக் கொள்ள ஒரு ஒப்பந்த வேலை முறையை அறிமுகப்படுத்துதல். **II). பண்ணைகளின் காணிகளை விதை உற்பத்தித் தரப்புகள் பயன்படுத்துதல்** தற்போது பண்ணைகளில் உள்ள காணிகளை மேலும் மேம்படுத்தி விதைப் பயிர்களுக்கு பயன்படுத்தும் அளவுக்கு போதிய மனித வளமும், பௌதீக வளமும் இல்லாததால், எதிர்காலத்தில் பௌதீக வளங்கள் வழங்கப்பட்டாலும் பண்ணையில் பாரிய மனித வள பற்றாக்குறை காணப்படும். எனவே, தேசிய விதைகளினது தேவையின் அடிப்படையிலும், விதை இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் வகையிலும், விவசாயிகளுக்கு சொந்தமான நிலங்களில் விதைப் பயிர்ச் செய்கையை மேலும் அதிகரிக்க பின்வரும் பிரேரணைகள் முன்வைக்கப்படுகின்றன. **a).** ஒப்பந்த விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பண்ணை தொழிலாளர்களை பதிவு செய்து அந்த விதை உற்பத்தியாளர்களுக்கு பண்ணைகளின் மூலம் தண்ணீரையும் மற்றும் காணியையும் வழங்கி விதை உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல். **b).** சமுதாய விவசாயிகள் அமைப்புகளின் அடிப்படையில் விதை உற்பத்தி விவசாயிகள் குழுக்களை உருவாக்கி, விவசாயிகளுக்கு சொந்தமான நிலங்களை அந்தக் குழுக்களுக்கு வழங்கி, விதை உற்பத்தி செயற்பாடுகளுக்கு அந்த நிலங்களை பயன்படுத்துதல். மேற்கூறிய இரண்டு முறைகளிலும் அரசாங்கத்தின் பங்காக 10% வீதத்தை அல்லது கணக்கிடப்பட்ட நிதித் தொகையை விவசாயத் திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான ஒரு முறையியலை தயாரித்தல். **III). நிரந்தர தொழிலாளர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்** விதை உற்பத்தித் துறையில் அன்றாட தொழிலாளர் தேவையைப் பூர்த்தி செய்வது பெரும் சவாலாக உள்ளது. இதன் நிமித்தம் நிரந்தர தொழிலாளர்களும் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களும் ஈடுபடுத்தப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டு முதல் நிரந்தர தொழிலாளர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆகையால், இந்தக் கால கட்டத்தில் ஏராளமானோர் ஓய்வு பெற்றுள்ளனர். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஒப்பந்தத்

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

தொழிலாளர்கள் பண்ணைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஒப்பந்தத் தொழிலாளர்களின் நாளாந்த மற்றும் மாதாந்த வருகை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. எனவே, பண்ணையில் இலக்கு எண்ணிக்கையிலான தொழிலாளர் அலகுகளை நியமிக்க முடியவில்லை. இதனை நிவர்த்தி செய்ய விவசாயத் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள தொழிலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும்.

IV). வன விலங்குகளினால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்

விவசாயத் திணைக்களத்தின் விதைப் பண்ணைகளான மகாஇளுப்பள்ளம, பொலன்னறுவை, கந்தளாய், கரடியனாறு, முருங்கன், எழுவன்குளம் போன்ற பிரதேசங்களில் காட்டு விலங்குகள் குறிப்பாக காட்டு யானைகளின் சேதம் மிக அதிகமாக உள்ளது. இந்த பண்ணைகளுக்கு சொந்தமான நிலப்பரப்பு, 29 பண்ணைகளின் மொத்த நிலப்பரப்பில் 40% அதிகமாக உள்ளது. மேலும் காட்டு விலங்குகளால் ஏற்படும் சேதத்தால் அதிக அளவு பயிர்கள் சேதமடைகின்றன. இது மட்டுமன்றி அறுவடைகளின் தரமும் அதிகளவில் குறைகின்றது. காட்டு விலங்குகளினால் ஏற்படும் சேதங்களை கட்டுப்படுத்துவதற்கு பண்ணை அளவில் மின்சார வேலிகளை அமைக்காமை, இரவு நேரங்களில் வன விலங்குகளை விரட்டுவதற்கு காவலாளர்களையும், தொழிலாளர்களையும் ஈடுபடுத்தாமை ஆகிய காரணங்களினால் வன விலங்குகளின் சேதத்தை தடுக்க முடியவில்லை. காட்டு யானைகளிலிருந்தும் மற்றும் ஏனைய வன விலங்குகளிடமிருந்தும் பயிர்களைப் பாதுகாக்க பின்வரும் பிரேரணைகள் முன்மொழியப்படுகின்றன.

a). பருவகாலத்தில் பயிர்களை பயிரிடுவதற்கு தேவையான வசதிகளை (உழைப்பு) பண்ணைகளுக்கு பெற்றுக் கொடுத்தல்.

b). வனவிலங்குகள் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியன இணைந்து வன விலங்குகள் பண்ணைகளுக்குள் நுழைவதைத் தடுக்க முறையான நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

V). நீர்ப்பாசன வசதிகளை முறையாகப் பெற்றுக் கொள்ளல்

விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான பெரும்பாலான பண்ணைகளில், நீர்ப்பாசன முறைமையின் கீழ் விதை உற்பத்தி செயல்முறை மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பண்ணைகள் பரப்பளவு 40 ஹெக்டேர் முதல் 225 ஹெக்டேர் வரையான அளவில் காணப்படுகின்றன. இந்தப் பண்ணைகளில் உள்ள வளங்களைப் பொறுத்து,

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

இலக்குக்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு கணிசமான கால அவகாசம் தேவைப்படுகின்றது. சாதாரண விவசாயிகள் பயிரிடும் 1 முதல் 5 ஹெக்டேர் வரையிலான நிலப் பரப்புக்கு ஏற்ற பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் தண்ணீர் பெறப்படுகின்றது. அந்தப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டங்களின்படி, பண்ணையில் பயிர்ச் செய்கையை தாபிக்க முடியவில்லை என்பது கவனிக்கப்படுகின்றது. எனவே, ஒரு பண்ணையில் தண்ணீரின் தேவையை கண்டறிந்து நீர்ப்பாசன முறைமையிலிருந்து நீரை பெற்றுக் கொள்வது அவசியம். அதன் நிமித்தம் பின்வரும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

a) விதை உற்பத்தியை ஒரு தேசிய தேவையாகக் கருதி தேசியத் திட்டத்தின்படி நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து பண்ணைகள் அமைந்துள்ள பகுதியில் நீர்ப்பாசன நீரை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தல்.

b) பண்ணையில் நீரை களஞ்சியப்படுத்தும் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் நீர்மார்க்கங்களை முறைப்படுத்துதல்.

VI). உத்தியோகத்தர்களுக்கு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

பண்ணைகள் நாட்டின் தொலைதூர பகுதிகளில் அமைந்துள்ளதால், ஊழியர்களை ஈர்ப்பதும் மற்றும் தக்கவைப்பதும் மிகவும் கடினமான ஒரு கருமாக உள்ளது. பெரும்பாலான பணிகளை தொழில் நுட்ப அலுவலர்களின் மேற்பார்வையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், பண்ணையில் போதுமான அளவு அலுவலர்கள் இருப்பது மிகவும் அவசியம். அதன்படி, பின்வரும் பிரேரணைகள் முன்மொழியப்படுகின்றன.

a). இலங்கை விவசாய சேவையின் தொழில் நுட்ப சேவைக்கான உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்.

b). பண்ணைகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்தல்.

c). விடுமுறை நாட்களில் அல்லது வழமையான வேலை நேரத்திற்கு மேலதிகமாக வேலை செய்வதற்கு மேலதிக நேர கொடுப்பனவுகளை வழங்குதல்.

d). உத்தியோகபூர்வ இல்லங்களை இலவசமாக வழங்குதல்

e). போக்குவரத்து வசதிகளையும் மற்றும் எரிபொருட்களையும் வழங்குதல்.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

VII). தொடர்ச்சியாக நிதிகளை வருடாந்தம் பெற்றுக் கொடுத்தல்

விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான பண்ணைகள் 1940 ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் தாபிக்கப்பட்டவை. சுமார் 60 ஆண்டுகள் கழிந்திருப்பதால் அந்தப் பண்ணைகளில் உள்ள பௌதீக வளங்களை தற்போது புனரமைக்க வேண்டும். மேலும், விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்துவதும், மேம்படுத்துவதும் அத்துடன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் அவசியமாகும். மேலும், விதை உற்பத்திக்கு நவீன தொழில் நுட்பங்களையும் மற்றும் முறையியல்களை பிரயோகிக்க வேண்டியுள்ளதால், பண்ணைகளுக்கு தேவையான இயந்திரங்களையும் மற்றும் உபகரணங்களையும் கொள்வனவு செய்யும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், காலநிலையில் மாற்றம் நிகழ்வதால், நீர் விநியோக முறைமையை மேம்படுத்த வேண்டியுள்ளது. ஆகையால், ஆண்டுதோறும் முதலீடு செய்ய வேண்டும். மேலும், உள்நாட்டு விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும். அந்த விதைகளின் போதிய இருப்புகளை பேணவும் வேண்டும். களஞ்சியசாலைகளையும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த வேண்டும். மேற்கூறிய உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு நிமித்தம், துரித விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதிகளை தொடர்ச்சியாக ஒதுக்குவது விவசாய மேம்பாட்டு முதலீடுகளுக்கான ஒரு தேசிய தேவையாகக் கருதப்படுகின்றது.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

07. குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகள்	
1. உள்நாட்டில் விதை உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தடையாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள பதவியணியில் உள்ள பதவி வெற்றிடங்கள் மற்றும் அந்தப் பதவி வெற்றிடங்களுக்கு புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதில் உள்ள தடைகள் என்ன என்பதை உள்ளடக்கி ஒரு வாரத்திற்குள் ஒரு அறிக்கையை தனக்கு சமர்ப்பிக்குமாறு குழு பணிப்புரை விடுத்தது. **விவசாயத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகள், ஒவ்வொரு பணியகத்திலும் உள்ள உரிய மற்றும் உண்மையான ஆளணி, ஒவ்வொரு பிரிவிலும் நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அந்த பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியாததற்கான காரணங்கள் என்பன தொடர்பான ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	இது தொடர்பில் தற்போதைய நிலவரத்தை பின்வருமாறு முன்வைக்கின்றோம். **<u>இலங்கை விவசாய சேவை</u>** இலங்கை விவசாய சேவையில் அப்போது 756 பதவி வெற்றிடங்கள் நிலவிய போதிலும், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த SC (FR) 283/2014 மனு 2021.03.08 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்த அந்த மனு சம்பந்தமாக ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு மனுதாரர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆகையால், 2020.06.30 ஆம் திகதியில் இலங்கை விவசாய சேவையின் தரம் III இல் நிலவிய 678 பதவி வெற்றிடங்களில் 310 பதவி வெற்றிடங்களுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கான ஒரு வர்த்தமானி அறிவித்தலும் மற்றும் திருத்திய தகைமைகளின் கீழ் மட்டுப்படுத்திய அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கான ஒரு வர்த்தமானி அறிவித்தலும் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை 2023.02.19 ஆம் திகதியிலும் மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை 2023.04.08 ஆம் மற்றும் 09 ஆம் திகதிகளிலும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே மட்டுப்படுத்திய அடைப்படையில் பரீட்சைக்கு தோற்றி அந்தப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சாத்திகளுக்கு மத்தியில், பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இரண்டு மடங்குகள் அளவில் பரீட்சாத்திகளின் பட்டியல் பரீட்சைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கட்டமைந்த நேர்முகப் பரீட்சையை 2023.10.23 ஆம் திகதி முதல் 2023.10.26 ஆம் திகதி வரை நடத்த தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மட்டுப்படுத்திய அடிப்படையில் நிலவுகின்ற 148 பதவி வெற்றிடங்களை அந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுகின்ற பரீட்சாத்திகளுக்கு மத்தியிலிருந்து நிரப்ப எதிர்பார்க்கப்படுகின்றது. திறந்த அடிப்படையில் நிலவுகின்ற 162 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. அந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் இது வரை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படவில்லை. அந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 310 பதவி வெற்றிடங்களை நிரப்ப எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த ஆட்சேர்ப்புகளுக்குப் பிறகு, 2023.06.30 ஆம் திகதிக்கு, இலங்கை விவசாய சேவையில் திறந்த அடிப்படையில் 234 பதவி வெற்றிடங்களும் மற்றும் மட்டுப்படுத்திய அடிப்படையில்

215 பதவி வெற்றிடங்களும் என மொத்தம் 449 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றில், திறந்த அடிப்படையில் காணப்படும் 234 பதவி வெற்றிடங்களுக்கு "அரசாங்க நிறைவேற்றுத் துறைப் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் பொதுப் போட்டிப் பரீட்சையின்" மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளுமாறு பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், மட்டுப்படுத்திய அடிப்படையில் காணப்படும் 215 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் முகமாக விண்ணப்பங்களை அழைக்கும் ஒரு அறிவித்தலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

விவசாய ஆலோசகர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவியாளர்கள்

அப்போது விவசாய ஆலோசகர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளில் 446 பதவி வெற்றிடங்கள் இருந்தாலும், தற்போது மொத்தம் 555 பதவி வெற்றிடங்கள் உள்ளன.

அதன்படி, 2021.12.31 ஆம் திகதிற்கு, விவசாய ஆலோசகர் பதவிக்கு மட்டுப்படுத்திய அடிப்படையில் 110 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை 2023.08.12 ஆம் ஆம் திகதி பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுள்ளது. மேலும், 309 பதவிகளில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு (மட்டுப்படுத்திய - 93, திறந்த - 216) ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

2021.12.31 ஆம் திகதிக்கு மட்டுப்படுத்திய அடிப்படையில் ஆராய்ச்சி உதவியாளர் பதவியில் நிலவுகின்ற 30 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை 2023.08.12 ஆம் திகதி பரீட்சைகள் திணைக்கத்தினால் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பதவியில் நிலவும் 97 பதவி வெற்றிடங்களுக்கு (மட்டுப்படுத்திய 29, திறந்த - 68) ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

நிரந்தர தொழிலாளர்கள்

விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருள் அபிவிருத்தி நிலையத்தைப் பொறுத்தவரையில், நிரந்தரத் தொழிலாளர் பதவியில் அப்போது 191 பதவி வெற்றிடங்கள் இருந்தாலும், தற்போது

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

	அந்தப் பதவியில் 207 வெற்றிடங்கள் உள்ளன. பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 29/2014 இன்படி, ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குமாறு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் கோரப்பட்டுள்ளது. ஆகையால் AMP/23/1102/612/033 ஆம் இலக்க 26.06.2023 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கை சார்ந்த தீர்மானத்தின் பின்னர் அந்த விஞ்ஞாபனத்தை கருத்திற் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதால், தற்போது திணைக்களத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களினால் இந்த நிரந்தர தொழிலாளர் பதவிக்குரிய பணிகள் நிறைவேற்றப்பட்டன. எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கை சார்ந்த தீர்மானத்தின் அடிப்படையில், இந்தப் பதவியில் உள்ள தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனது இலக்கம் கூஉදෙ/පා/1/4/3/1-IV (ம்ரவி) ஆம் இலக்க 2023.01.11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், வெற்றிடம் நிலவும் பதவிகளுக்கு புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் வரை தத்தமது பிரிவுகளினுள் உள்ள மனித வளங்களை முகாமை செய்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், நிலவுகின்ற நிலவரத்தின் அடிப்படையில் மிகவும் அத்தியாவசியமான பதவியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான சந்தர்ப்பத்தில், வேறு பணிப்பாளர் பிரிவினால் அல்லது அத்தகைய பிரிவில் உள்ள வேறு அலகுகளினால், பொருந்தக் கூடியதாக இருந்தால், அது பற்றி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
2. கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்த விதைகளின் தேவை மற்றும் விநியோகம் மற்றும் தனியார் துறை மற்றும் அரச துறை தனித்தனியாக உற்பத்தி செய்த தொகை என்பவற்றுக்கு ஏற்றவாறு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதைகளினதும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் விதைகளினதும் சதவீதம் உள்ளது என்பது பற்றி பதினைந்து நாட்களுக்குள் குழுவிடம் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என குழு	எனது கூஉදෙ/මු/8/6/2021/37 ஆம் இலக்க 2022.11.28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. திருத்திய அறிக்கை **பின்னிணைப்பு 01** எனக் குறிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

பணிப்புரை விடுத்தது. **உரிய தரவுகள் அடங்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** 3. விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றிய 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைகள் பற்றிய சட்டத்தின்படி, தற்போதுள்ள சிக்கல்கள், விதைகளின் விலையை கட்டுப்படுத்துதல் மற்றும் அத்தகைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்பன அடங்கிய ஒரு அறிக்கையை பதினைந்து நாட்களுக்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு பணிப்புரை விடுத்தது. **விதைகளின் விலைகள் தொடர்பான தற்போதைய நிலையும் மற்றும் விதைகளின் விலையை ஒழுங்குறுத்தலும் பற்றிய ஒழுங்குவிதிகளை தயாரிப்பது தொடர்பான ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	எனது கூஉදෙ/මු/8/6/2021/37 ஆம் இலக்க 2022.11.28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. **விதைகளின் விலைகளை ஒழுங்குறுத்துவது தொடர்பான ஒழுங்குவிதிகளை தயாரித்தல்** விதைகள் மற்றும் நடுகை மூலப்பொருட்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைகள் பற்றிய சட்டத்தின்படி, தற்போதுள்ள சிக்கல்கள், விதைகளின் விலையை கட்டுப்படுத்துதல் மற்றும் அத்தகைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள். **மரக்கறி விதைகள் உற்பத்தித் தொழிலில் விலைகள் தொடர்பான தற்போதைய நிலை** தனியார் துறை திறந்த - மகரந்த சேர்க்கை இனங்களினதும் மற்றும் கலப்பினங்களினதும் விதைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் அதே வேளையில், அது அதிகளவில் இறக்குமதி செய்யப்படும், திறந்த - மகரந்த சேர்க்கை அல்லது கலப்பின விதைகளையும் விநியோகிக்கின்றது. காய்கறி பயிர்களின் உற்பத்தியில் ஏற்படும் உற்பத்தி செலவைக் கணக்கிடுவதில் விதைகளின் விலைகள் ஒரு முக்கியமான காரணியாக விளங்குகின்றது. விதைகளின் விலைகள் 3% முதல் 10% வரையான ஒரு பெறுமானத்தை எடுத்துக் கொள்கின்றன. மேலும் விதைகளின் விலைகள் பரவலாக வித்தியாசப்படுகின்றன. விதைகளின் விலைகள் பயிர், பயிர் இனம் (கலப்பின அல்லது திறந்த மகரந்த சேர்க்கை இனம்), (உள்ளூர், இறக்குமதி), தொழில்முனைவு (பொது, தனியார்), விளம்பரம் போன்றவற்றைப் பொறுத்து வேறுபடும். **விதைகளின் வணிக விலைகளை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகள்** 1. விதைகளின் உற்பத்தி, ஏற்றியிறக்கல், பொதியிடுதல், சந்தைப்படுத்தல் செலவுகள் மற்றும் பங்குலாபம் ஆகியவற்றைப் பொறுத்து திறந்த மகரந்த சேர்க்கை செய்யப்பட்டுள்ள பயிர் இனங்களின் விதைகளின் விலைகள் வேறுபடும்.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

2. உள்நாட்டு விதைகளின் உற்பத்தியை கருத்தில் கொள்ளும் போது, நீர் விநியோக முறைமைகள், பாதுகாப்பான கூடாரங்கள், பொதியிடுதல் ஆகியன தொடர்பான செலவுகள் போன்றவை நிலையான செலவுகளைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாக கருதப்படலாம். உள்நாட்டு விதைகளின் உற்பத்திக்கு செலவாகும் வேறுபடும் செலவுகளாக, உழைப்பு, எரிபொருள், உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்கள், அறுவடை, நீர் முகாமைத்துவம், நோய் மற்றும் பூச்சி கட்டுப்பாடு, களை கட்டுப்பாடு முதலியவற்றுக்கான செலவுகளை பிரதான செலவுகளாகக் கொள்ளலாம்.

3. 2023 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைகள் சட்டம் விதைகளின் தரத்தை ஒழுங்குறுத்துவதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ள போதிலும், அது விதைகளின் விலைகளை ஒழுங்குறுத்துவதற்கான அதிகாரத்தை வழங்கவில்லை. எவ்வாறாயினும், தற்போது 05 முக்கிய வகைகளின் கீழ் (உள்நாட்டு திறந்த மகரந்த சேர்க்கை, உள்நாட்டு கலப்பினங்கள், இறக்குமதி செய்யப்படும் திறந்த மகரந்த சேர்க்கை, இறக்குமதி செய்யப்படும் கலப்பினங்கள், பாரம்பரிய இனங்கள்) மிகப் பெரிய இன விதைகள் (சுமார் 250 இனங்கள்) சந்தையில் கிடைக்கின்றன. அவற்றின் விலைகள் பரவலாக வேறுபடுகின்றன. எனவே, ஒவ்வொரு பயிர் வகைக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட்டாலும், இது மிகவும் சிக்கலான செயலாகவும், நடைமுறை சாத்தியமற்றதாகவும் இருக்கும். எனவே, மேற்கண்ட அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு ஒவ்வொரு பயிருக்கும் உச்ச விலையை நிர்ணயிப்பது சிறந்ததாகும்.

பிரேரணைகள்

1. உள்நாட்டு விதை இனங்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கலப்பினங்கள் மற்றும் திறந்த மகரந்த சேர்க்கை செய்யப்பட்டுள்ள விதை இனங்கள் என்பவற்றுக்கு விவசாயத் திணைக்களத்தினால் ஒரு குழுவின் மூலம் விதைகளின் விலைகளை சரியான நேரத்தில் நிர்ணயித்தல்.

2. பொது மற்றும் தனியார் துறைகளில் விதை உற்பத்தியை மேலும் வலுப்படுத்துதல் மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல்.

3. விவசாயிகளினாலும், கமக்காரர் அமைப்புகளினாலும் மற்றும் தனியார் துறையினரினாலும் உள்நாட்டு விதைகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் மற்றும் உள்ளீடுகளுக்கு ஊக்குவிப்பும் தொகைகளை வழங்குதல்.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

	4. பயிர்ச் செய்கைப் போக ஆரம்பத்தில் விளைநிலங்களுக்கு விதைகளை எடுத்துச்செல்வதற்கான வேலைத் திட்டத்தை விரிவுபடுத்துதல் மற்றும் அதன் நிமித்தம் அரச துறையின் வசதிகளை மேம்படுத்துதல். 5. கமத்தொழில் அமைச்சின் தலையீட்டில், தனியார் துறையினரின் பங்களிப்புடன், அதிகளவில் பயிரிடப்படும் அதிக விலை வாய்ந்த பயிர் விதைகளுக்கு மாத்திரம் விற்பனை விலையை ஒழுங்குறுத்தும் ஒரு பொறிமுறையை தயாரித்தல். 6. விதை உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் ஒரு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல். விதைகளுக்கு ஒரு உச்ச விலை நிர்ணய குழுவை நியமிப்பதே பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டது. கமத்தொழில் அமைச்சில் நடைபெற்ற தேசிய விதைகள் பற்றிய குழுவின் கூட்டத்தில் (தனியார் துறை அடங்கலாக) இது பற்றி ஆராயப்பட்டது. இதன் போது தனியார் துறையினர் விலைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி தெளிவுபடுத்தினர். தனியார் துறையினருடன் அரசாங்கம் மேலும் கலந்துரையாடி விலைகளின் நிர்ணயம் பற்றி முடிவெடுப்பது பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, 2023.11.07 ஆம் திகதி அனைத்து அக்கறையுடைய தரப்புகளுடனான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
4. உள்நாட்டில் விதைகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் எவ்வளவு செலவு செய்துள்ளது மற்றும் விதை உற்பத்தியாளர்களினால் இது வரை எவ்வளவு விதை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்ற தரவுகள் அடங்கிய ஒரு அறிக்கையை பதினைந்து நாட்களுக்குள் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என குழு பணிப்புரை விடுத்தது. **உள்நாட்டு விதை உற்பத்தியின் தற்போதைய முன்னேற்றம், விவசாயிகளிடையே உள்நாட்டு**	இது தொடர்பான தற்போதைய நிலைமை பற்றிய விபரம் **பின்னிணைப்பு 02** இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

விதைகளை பிரபலப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள், கணக்காய்வு அறிக்கையில் உள்ள சிபாரிசுகளுக்கான பதில்கள் என்பன அடங்கிய ஒரு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 77
நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில் அமைச்சு

உணவுகள் ஆணையாளர் திணைக்களம் பாதுகாப்பான அரிசி இருப்பை பேணிச்செல்லல் மற்றும் களஞ்சியசாலைகளின் பயன்பாட்டு செயல் திறன் ஆகியன தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை விசாரணை செய்த திகதி - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆம் திகதி	
குழு கண்டறிந்த குறைபாடுகள் / குழு வழங்கிய பணிப்புரைகள்	**குழு சுட்டிக் காட்டிய குறைபாடுகளை சீர்செய்வதற்கு / குழு வழங்கிய சிபாரிசுகளை செயற்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலை**
06. பாதுகாப்பான அரிசி இருப்பை பேணிச்செல்ல முடியாதுள்ளமை	
2005 ஆம் ஆண்டு வரை விவசாயிகளிடம் இருந்து நெல்லை மாவட்ட செயலாளர்களின் ஊடாக கொள்வனவு செய்து அரிசியாக மாற்றி இருப்புகளை பேணி வந்த தனது திணைக்களம், 2006 ஆம் ஆண்டு மூடப்பட்டு, 2008 ஆம் ஆண்டு மீண்டும் மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் நெல் கொள்வனவு செய்வதற்கான நிதி வழங்கப்படாததால், இந்த இருப்புகளை பேண முடியவில்லை என இது குறித்து கருத்துத் தெரிவித்த உணவுகள் திணைக்களத்தின் பி.வ.அ. குறிப்பிட்டார். இதற்காக ஆண்டுதோறும் 22 பில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர், அரிசி இருப்புகளை பேண அரசாங்கம் முன்வராத பின்னணியில், 2012 ஆம் ஆண்டு 292 மில்லியன் ரூபா செலவில் களஞ்சிய வசதிகளை நவீனப் படுத்துவது, பொது மக்களின் பணத்தை வீணடிக்கும் செயலாகும் என்று குழு கருத்து தெரிவித்தது. நவீனமயப் படுத்திய களஞ்சியசாலைகளின் கொள்ளளவு 34,000 மெற்றிக் டொன்களாக இருந்தாலும், அந்த அளவு அரிசி நாட்டில் இல்லை என சுட்டிக் காட்டிய குழு, கருத் திட்டங்களை ஆரம்பிக்கும் போது நிறுவனங்களுக்கு இடையே நல்ல ஒருங்கிணைப்பு இல்லை என்பதையே	• கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய அரசாங்கத்திற்கு சொந்தமான களஞ்சியசாலைகள் தொடர்பான தகவல்கள் பின்னிணைப்பு 03 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. • நெல் சந்தைப்படுத்தல் சபை முன்னர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 356 களஞ்சியசாலைகளின் எண்ணிக்கைக்கு பதிலாக அது 353 களஞ்சியசாலைகள் என திருத்தப்பட்டுள்ளது. கிழக்குப் பிராந்தியத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களவாஞ்சிக்குடி 0,02, அரசடித்தீவு 01,02 மற்றும் கலிவியங்காடு ஆகிய களஞ்சியசாலைகள் உரிய நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும். • அதன்படி, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான இற்றைப்படுத்தப்பட்டுள்ள புதிய களஞ்சியசாலைகளின் பட்டியல் பின்னிணைப்பு 04 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

இது சுட்டிக் காட்டுவதாகவும் அது குறிப்பிட்டது.

அத்துடன், அரசாங்கமும் மற்றும் அமைச்சர்களும் மாறும் போது தமது தேவைக்கேற்ப கொள்கைகளை மாற்றியமைப்பதன் விளைவாக இவ்வாறு மக்களின் பணம் வீணடிக்கப்படுவதாக சுட்டிக் காட்டிய குழு, நிலையான ஒரு தேசியக் கொள்கையின் அவசியத்தையும் வலியுறுத்தியது.

<u>சிபாரிசுகள் / பணிப்புரைகள்</u>

வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கும், கமத்தொழில் அமைச்சுக்கும் மற்றும் அவற்றின் சார்பு நிறுவனங்களுக்கும் சொந்தமான களஞ்சியசாலைகள் பற்றிய துல்லியமான தரவு இல்லாமை தொடர்பில் தனது கவனத்தை ஈர்த்த குழு, சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுடனும் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனும் ஒருங்கிணைந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசுக்கு சொந்தமான களஞ்சியசாலைகள் தொடர்பான பின்வரும் தகவல்கள் அடங்கிய முழுமையான ஒரு ஆய்வை மேற்கொண்டு விரிவான ஒரு அறிக்கையை குழுவுக்கு ஒரு மாத காத்திற்குள் சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சினதும் மற்றும் வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினதும் பிரதான வகைகூறும் அதிகாரிகளுக்கு குழு பணிப்புரை விடுத்தது.

- நிறுவனத்தின் கீழ் கிடைக்கும் மொத்த களஞ்சிய வசதிகளின் எண்ணிக்கை.
- ஒவ்வொரு களஞ்சிய வசதியும் அமைந்துள்ள இடம்.
- ஒவ்வொரு களஞ்சிய வசதியினதும் கொள்ளளவு.
- ஒவ்வொரு களஞ்சிய வசதியினதும் உரிமை பற்றிய தற்போதைய நிலை.
- களஞ்சிய வசதிகள் வேறு தரப்பினரால் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்டிருப்பின் அந்த களஞ்சிய வசதிகள் எவை?

- வாடகை அடிப்படையில் பெற்றுள்ள

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

களஞ்சியசாலைகள் பற்றிய தகவல்கள் (களஞ்சியசாலைகளை வழங்கிய நிறுவனங்கள், களஞ்சியசாலைகள் முறையான ஒப்பந்தத்துடன் வழங்கப்பட்டுள்ளனவா, ஒப்பந்தம் இல்லாமல் களஞ்சியசாலைகள் வழங்கப்பட்டிருந்தால், பொறுப்பு சொல்ல வேண்டிய அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் பதவிகள், வாடகை நிலுவைகள் இருந்தால் நிலுவைத் தொகைகள் மற்றும் சம்பந்தமான நிறுவனங்கள் தனித்தனியாக) களஞ்சிய வசதிகளின் தற்போதைய நிலை o பயன்படுத்தப்பட்டுள்ளது / பயன்படுத்தப்படவில்லை என்ற விபரம் o பழுதுபார்க்க வேண்டுமா / இல்லையா என்ற விபரம் நவீனமயப் படுத்திய களஞ்சியசாலைகளில் பிரச்சினைகள் தொடர்கின்றனவா? அத்தகைய பிரச்சினைகள் எவை? *** உரிய அறிக்கை கிடைத்துள்ளது.**	

K.G.D.N. Jayasinghe
Chief Accountant
Ministry of Agriculture
No. 80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue,
Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.